அறிவித்தல்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

<u>கருணை வாய்ப்பின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பம் சமர்ப்பித்தல்</u>

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டுவரும் மாணவர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் கற்கைநெறித் திட்டங்களுக்கு அமைவாக பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு மொத்தமாக நான்கு வாய்ப்புக்களுக்கு (ஒரு வழமையான மற்றும் மூன்று மீள தோற்றும் வாய்ப்பு) உரித்தானவர் **(தொடர்ச்சியான பரீட்சை ஆண்டுகள் கருத்தில் கொள்ளப்படும்)**.

உரிய நான்கு வாய்ப்புக்களுக்குள் **(தொடர்ச்சியான பரீட்சை ஆண்டுகள்)** தமக்குரிய பரீட்சைகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யாத மாணவர்கள் கருணை வாய்ப்பு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் மூலமாக மட்டுமே அடுத்துவரும் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

குறித்த கருணை வாய்ப்புக் கோரிக்கையானது உரிய பருவத்திற்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் போதே போதிய கால அவகாசத்துடன் பட்டப்படிப்புடன் தொடர்புடைய கல்வி ஒருங்கிணைப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் (Senate) கருணை வாய்ப்பின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட மாணவர்கள் மட்டுமே தொடர்புடைய பரீட்சை/ பாடங்களுக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

பிரதிப் பதிவாளர்
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
05.11.2026

பிரதி :- கல்வி ஒருங்கிணைப்பாளர்கள்